### உசிலம்பட்டி அருகே

# நர்சிங் படிக்க விரும்பிய சிறுமி தற்கொலை!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, செப்.1

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

உசிலம்பட்டி அருகே 16 வயது தலித் சிறுமி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது.

தனது எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் பள்ளிச் சேர்க்கைக்காகச் சென்ற அந்தச் சிறுமி, அங்கு அவமானப் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், மனவேதனை



யில் அச்சிறுமி உயிரை மாய்த்துக் கொண்டதால், அவரது குடும்பம் நிலை குலைந்து போயுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் மரியாதையும், கண்ணியமும், பாதுகாப்பான கல்விச் சூழலும் கிடைப்பது அவர்களின் உரிமை. இதுபோன்ற மனவேதனைக்கு எந்தக் குழந்தையும் தள்ளப்படக் கூடாது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கி, நீதி நிலை நாட்டப் படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தமது விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தொரப்பாடியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகம் திறந்த வெளி மாநில மாநாட்டில் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திட்டக்குடி சட்ட மன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயனின் தாயார்

# ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அம்மையார் நினைவேந்தல் நிகழ்ச்சி!

## துணை பொதுச்செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி.-ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

திருவாரூர், செப்.1-

திருவாரூர் தெற்கு மாவட்டம் சித்தமல்லியை சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் பொதுவுடமை போராளியுமான ஏ.கே.சுப்பையா அவர்களின் மனைவியும், தமிழ்நாடு அரசின் முன்னாள் சிறப்பு பிரதிநிதியும், கழக விவசாய அணி செயலாளரும் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயாருமான ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அவர்கள் கடந்த 23.07.2026 அன்று மறைவெய்தினார்.

மறைவின் தகவல் அறிந்த கழக துணை பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா எம்.பி., அவர்களும் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் சொந்த ஊரான திருவாரூர் தெற்கு மாவட்டம் சித்தமல்லியில் உள்ள அவரது இல்லத்திற்கு வந்து மறைந்த ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அப்போது ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அவர்கள் பிரிவால் வாடும் ஏ.கே.எஸ். விஜயன் உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் கழக துணை பொதுசெயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா எம்.பி., அவர்களும் தங்களது இரங்கலையும் ஆறுதலையும் அவர்களுக்கு தெரிவித்தனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்திக், நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பாலஞானவேல், இரா. மனோகரன், உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.

### ‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ திட்டத்தின் கீழ்

# அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!


சென்னை, செப்.01-

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ திட்டத்தின் கீழ் அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்கீழ், எங்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், 32 நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறுகிறார்கள் என்பதையறிந்து, எங்கள் முதலமைச்சர் அவர்கள், ஞாயிற்றுக்கிழமையன்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, திங்கட்கிழமை நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தடுத்த முதல்வர் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் பிறகு ஏன் தொடர்ந்து வழங்கவில்லை என்று பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். நல்மனம் படைத்தோர் உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகுகிறார்கள். ஆகம கமிட்டி அதற்கான தீர்ப்பு வழங்கி, எந்தெந்தத் திருக்கோயில்கள் ஆகமத்திற்குள் வருகின்றன, எந்தெந்தத் திருக்கோயில்கள் ஆகமத்திற்கு வெளியே இருக்கின்றன என்ற முடிவு தெரிந்த பிறகுதான், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்கீழ் அர்ச்சகர்



களை நியமிக்கலாம் என்று ஒரு தீர்ப்பு வந்தது.

அதில், உயர்நீதிமன்றமே நேரடியாக இருவரை அந்த கமிட்டிக்கு தலைவராகவும், உறுப்பினராகவும் நியமிக்கி றது. அரசின் சார்பில் 3 பேர் நியமிக்கப்படுகிறார்கள். நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சருக்குத் தெரியும்; சமீபத்தில் கூட உச்சநீதிமன்றத்தில் அந்த ஆகம கமிட்டி இறுதி செய்ய வேண்டுமென்ற அந்த வழக்கு வந்தபோது, அதற்கு மேலும் 6 மாதக்காலம் வேண்டுமென்று மீண்டும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அதற்காக தனியாக G.O. வெளியிட்டு, உச்சநீதி மன்றத்திலே 3 மூத்த வழக்கறிஞர்களை நியமித்து, அந்தச் சட்டப் போராட்டத்தை ஆட்சி இருந்த வரை நடத்தினோம்;

இந்த ஆட்சிக்குப் பிறகும் அந்த சட்டப்போராட்டத்தை நாங்கள் நடத்த தயாராக இருக்கின்றோம். ஆகம கமிட்டி ஆகமம், ஆகமம் இல்லாத திருக்கோயில்களை முடிவு செய்கின்ற பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. ஆகவே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும் பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய எங்கள் தளபதி அவர்களும் காட்டிய வழியில் இந்த அரசு செயல்பட்டு ‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்; திட்டத்தின்கீழ் அர்ச்சகர்களை நியமிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வழக்கு தொடர்பாக நீதிமன்றம் குறித்து ஒரு கருத்தைச் சொன்னார். உண்மையில் சொல்கிறோம், மனசாட்சியோடு, வருத்தப்பட்டு சொல்கிறோம்.

இந்த வழக்கைப் பொறுத்தளவில் மதத்தால், இனத்தால், மொழியால் மக்களைப் பிளவுபடுத்துகின்ற சக்திகள்தான் உச்சநீதிமன்றத்தில் தடைபெறச் சென்றதே தவிர, திராவிட இயக்க கொள்கையை, திராவிட இயக்க சித்தாந்தத்தை கொண்ட நாங்கள் அதனை முழுமையாக எதிர்த்தோம்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு பேசினார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க அண்மையில் நடைபெற்ற கழக செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி கழக மறுசீராய்வு குழு நடவடிக்கை குறித்து மதுரை மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற்றதில் மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி மாநில நிர்வாகிகள் பொன்.முத்து ராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றினார். உடன் கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன், சின்னம்மாள், மூவேந்திரன், சிவக்குமார், பாக்கியநாதன், சேக் இஸ்மாயில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

### குற்றச் செயல்களில் ஈடுபடும் த.வெ.க.வினர்!

# ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களை முடக்கும் த.வெ.க. அரசுக்கு கண்டனம்!

## கரூர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கரூர், செப். 1 -

கழக நிர்வாக சீரமைப்புக்கு வரவேற்பு, ‘திராவிட மாடல்’ ஆட்சி திட்டங்கள் முடக்கும் த.வெ.க. அரசுக்கு எதிர்ப்பு, விலைவாசி உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து கரூர் மாவட்ட செயற்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாக, மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (30.08.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே. மணி, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயக்குமார்,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் சூரியனூர் அ.சந்திரன், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதிச் செயலாளர் தாரணி பி.சரவணன்,

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சு.ப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, க.சிவகாம சுந்தரி, கழக பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ். காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகரக் கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.எஸ். ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், கரூர் வடக்கு பகுதி கழக பொறுப்பாளர் எம்.பாண்டியன், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ். மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் சி. கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் எல். கரிகாலன், குளித்தலை மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் இ.ராமர், உள்ளிட்ட கழகத்தினர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வழங்கி வி. செந்தில் பாலாஜி கூறியதாவது: -

கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானங்களை முழுமையாக பின்பற்றி, கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி, கரூர் மேற்கு மாவட்டக் கழகம், கரூர் கிழக்கு மாவட்டக் கழகம் என பிரிக்கப்பட்டதற்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படியும், தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படியும் பகுதி, நகர, ஒன்றிய, பேரூர்க் கழகம் மறுசீரமைப்பு செய்வதெனவும்,

மேலும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் வயது வரம்பின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்திடவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கொண்டு வந்த மக்கள் நல திட்டங்களை முடக்கி தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும் தடுத்திடும் வகையில் செயல்படும் த.வெ.க. அரசை வன்மையாக இக்கூட்டம் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, சர்க்கரை, காய்கறிகள் உள்பட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைவாசியை கட்டுப் படுத்த தவறிய த.வெ.க அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த மூன்று மாதங்களில் பாலியல் வன்கொடுமைகள், கொலைச் சம்பவங்கள், போதை பொருள் கடத்தல் உள்பட எண்ணற்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் த.வெ.க. வினரையும் இந்த குற்றச் சம்பவங்களை தடுக்க தவறிய த.வெ.க. அரசையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் மின் வெட்டு இல்லாமல் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் த.வெ.க. அரசு பொறுப் பேற்ற நாள் முதல் தமிழ்நாட்டில் தொடர் மின் வெட்டு, மின் கணக்கீடு குளறுபடியால் கடுமையான மின் கட்டணம் உயர்வு ஏற்பட்டு பொது மக்கள், வணிக பெருமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்விநியோகத்திலும், மின் கட்டண உயர்விலும், மின் கணக்கீடு குளறு படிகளை உருவாக்கி வரும் த.வெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கரூர் மாவட்ட மக்கள் நலனுக்காக வழங்கிய முத்தான திட்டங்களான கரூர் மாநகராட்சியில் ரூ.485.38 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம், கரூர் மாநகராட்சி பகுதிக்கு ரூ.245.07 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம், ரூ.38.50 கோடி மதிப்பீட்டில் IT பார்க் திட்டம், ரூ.10கோடி மதிப்பீட்டில் கரூர் ஊராட்சி ஒன்றியம்,16 கால் மண்டபம் நெரூர் சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பணிகளின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்த த.வெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாக வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.